1970 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : எத்தனே விதமான வாழைகள் இருக்கின்றன என்பதற்கு அவற்றின் பெயர்ப் பட்டியல் இல்லே. புதியதாக ஒரு பயிர் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றுக்குப் பெயர் வைக்கப்படும். அதைத் தவருக இந்த அரசாங்கம் நினேக்கவில்லே. மேலும் மத்திய அரசாங்கம் தான் இது போல விதைகளுக்குப் பெயர் வைத்து முன்னேடியாக இருந்திருக் கிறது. அதன் காரணத்திஞல் எல்லோராலும் பெருமையாக ஏற்று கொள்ளப்படுகிற பெயர்களே வைக்கப்படுகின்றன. வட ஆற்காடு, செங்கல்பட்டு, கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களில் பச்சை வாழை பயிரிடப்பட்டு வருகிறது. போதிய உதவிகளும் அளிக்கப்படு கின்றன.

மாணவியர் விடுதிகள்.

* 147 வின—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள "அரசு மாணவியர் விடுதிக்குப் புது கட்டடம்" கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லே.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலேவர் அவர்களே, திருப்பூரில் தற்போது இருக்கிற மாணவியர் விடுதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் வருடம் சுமார் 5 ஆயிரம் ரூபாய் வாடகை செலவாகிறது. அதற்கு சொந்தமான இடம் அங்கே இருக்கிற காரணத்திஞல் விடு திக்கே சொந்தமான கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விடுதி களுக்கு சொந்தமான கட்டடம் கட்டும் திட்டம் ஃபேஸ்டு ப்ரொக்- கிராமாக நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கான செயற்குறிப்பு களே மாவட்ட நல அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அவ்வப்போது அனுப்பி வருகிருர்கள். திருப்பூர் நகர விடுதி சம்பந்தமாக செயற் குறிப்பு எதுவும் வந்ததாகத் தெரியவில்லே. ஆகவே, இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படவில்லே. அப்படிப்பட்ட செயற்குறிப்பு வந்தால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

* 148 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு ஜில்லா, காட்டுமன்னர்கோயில் அரசாங்க அரிசன பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லே.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அரசாங்கம் ஓரிடத்தை எடுத் துக்கொள்ள உரிமை உண்டு. எடுத்துக்கொண்ட ஒரு இடத்தைத் திரும்பவும் மற்றெருவருக்கு ஜாரி செய்யவும் உரிமை உண்டு. ஆயினும், ஹரிஜனப் பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடத்தைத்

திரும்ப தனிப்பட்டவருக்குக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன ? அவருக்கு ஏற்கனவே நிறைய நிலங்களும், மனைகளும் இருக்கின்றன. ஆகவே, அதைத் திரும்பவும் சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : என்னிடம் இருக்கும்படியான விவரம், தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான இடம்தான் அது. அந்தக் கட்டடத்திற்காக மாதம் 150 ரூபாய் வாடகையும் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவேதான் அதைத் திரும்பப்பெற எந்த விதமான நடவடிக்கையும் இல்லை.

திரு. என். ராஜாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹரிஜனப் பெண்கள் ஹாஸ்டலுக்காகக் காட்டுமன்னார்கோவிலில் இடம் கொடுத்து உதவ முன்வந்தார்கள். அந்தச் சூழ்நிலையில் தனிப் பட்டவருக்கு அது ஏன் ஜாரி செய்யப்பட்டது ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : என்னிடத்தில் இருக்கிற குறிப்பு எல்லாம் அது தனிப்பட்டவருக்குச் சொந்தமான இடமும், கட்டடமுமாகவே இருந்தது என்பதுதான். ஆயினும் அது அவருக்குச் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது என்பதற் கான ஆதாரங்களைத் தருவார்களேயானால், அது உண்மையாகவும் இருக்குமானால், திரும்ப அதை எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கம் தயங்காது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : தனிப்பட்டவருக்குச் சொந்த மாக இருந்தாலும் அதற்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. அந்த வகையில் இதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட திட்டம் எதுவும் இன்றைக்கு இல்லை.

Rupee-a-measure scheme.

*149. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to State—

(*a*) whether Rupee-a-measure Rice Scheme would be applicable to persons drawing a salary or income below 200 rupees a month; and

(*b*) whether Tamil Nadu N.G.O's Union is urging the Government to raise the limit to 500 rupees a month income group ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஏற்கனவே படியரிசித் திட்டம் அமுலாக்கப்பட்ட இடங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 200-ம் அதற்குக் குறைந்தும் ஊதியம் பெறுபவர்களுக்குப் படியரிசித் திட்டத் தின்கீழ், அரிசி தொடர்ந்து 1–2–70க்கு பிறகும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு (1970) ஏப்ரல் மாதம் முதல், சென்னை மாநகர், கோய முத்தூர், சிங்காநல்லூர் நகர், பேரூர் ஊராட்சி ஒன்றியம் முதலிய இடங்களில் இந்த வருவாய் வரம்பு ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டிருக் கிறது.